அ.வ.எண். 99/2015

பெயர் – சுப்புராஜ் (வா.சா.1)

நாள் – 27.07.2022

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் மிலிட்டிரியில் கடந்த 34 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். என் மனைவி என்ன செய்து வருகிறார் என்றால் வீட்டில் தான் இருக்கிறார். எனது குழந்தைகள் படித்து வருகிறார்கள் என்றால் எனது மகன் படித்துக்கொண்டிருக்கிறார். மகள் படித்து முடித்து வீட்டில் இருக்கிறார். நான் தூங்காரெட்டிபட்டி கிராமத்தில் எவ்வளவு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்தது முதலே 58 வருடங்களாக வசித்து வருகிறேன். தாவா சொத்து 11.10.1999 ம் தேதி கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். 11.10.1999 ல் சர்வே எண் 48/2, 52/1 உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.53, 39, 76, 77, 78, 79 மற்றும் 94 ஆகியவை கங்கரன்கோட்டை உட்கிடை கிராமம் தூங்காரெட்டிபட்டி கிராமத்தை சார்ந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்கள் வழியாகத்தான் தூங்காரெட்டிபட்டி கிராமத்திலிருந்து லட்சுமியாபுரம் செல்லக்கூடிய வண்டிப்பாதை இருந்தது என்றால் எனக்கு விபரம் தெரிந்து இல்லை. நான் மேற்படி விதமாக தெரியாது என்றும், இல்லையென்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் வழக்கிடை சொத்தின் வழியாக தூங்காரெட்டிபட்டி கிராமத்தில் இருந்து லட்சுமியாபுரம் கிராமத்திற்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கிராம வரைபடத்தில் உள்ளது போன்று ஒரு சிறிய வண்டிப்பாதை இருந்தது உண்மை என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அப்படி ஒரு பாதை இருந்திருக்கலாம், ஆனால் எனக்கு விபரம் தெரிந்து இல்லை. நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால் 1965 ம் ஆண்டு பிறந்தேன். கடந்த 1979 ம் ஆண்டு நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நில அளவு செய்யப்பட்டு புதிய புல எண், பட்டா எண், ஊராட்சி ஒன்றிய சாலை, நிலவியல் பாதை, அது சம்பந்தமான

புல வரைபடங்கள் உருவாக்கப்பட்டு நாளது தேதி வரை ஊர்ஜிதத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிறந்து பல வருடங்கள் கழித்து தான் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நில அளவு செய்யப்பட்டு புதிய புல எண், பட்டா எண், ஊராட்சி ஒன்றிய சாலை, நிலவியல் பாதை, அது சம்பந்தமான புல வரைபடங்கள் உருவாக்கப்பட்டு நாளது தேதி வரை ஊர்ஜிதத்தில் உள்ளது என்பதால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் போக வண்டிப்பாதை உள்ள 10 செண்ட் இடத்தில் அகத்தி பயிரிட்டு ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாக அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. விஏஓ வந்து பார்வையிட்டார். அது ஆக்கிரமிப்பு கிடையாது. 40 ஆண்டு காலமாக நாங்கள் அதில் பயிர் செய்து வருகிறோம். நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று சொல்லியுள்ளது பொய் என்றாலும் ஆக்கிரமிப்பு செய்ததால் நான் எங்களுக்கு அறிவிப்பு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து 07.07.2015ம் தேதி ஆக்கிரமிப்பை அகற்றி சொல்லி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விதமாக வழங்கப்படட் அறிவிப்பின் பேரில் மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏனெனில் அறிவிப்பு கொடுக்கவில்லை. விஏஓ வந்து தான் பார்வையிட்டு பட்டா இடம் என்று சொல்லிவிட்டார். விஏஓ பட்டா இடம் என்று சொன்னதற்கான அறிக்கை எதையாவது அவரிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.53, 39, 76, 77, 78, 79 மற்றும் 97 வழியாக செல்லும் வண்டிப்பாதை வழியாகத்தான் லட்சுமியாபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள் சென்று வருகிறார் என்றால் சரியல்ல. வேறு ஒரு வண்டிப்பாதை உள்ளது. அது 21 அடி அகலம் உள்ள பெரிய பாதையாகும். அதை தான் பயன்படுத்துகிறார்கள். மேற்படி 21 அடி அகலம் உள்ள வண்டிப்பாதையைப் பற்றி பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.53, 39, 76, 77, 78, 79 மற்றும் 97 வழியாக ஒரு

வண்டிப்பாதை உள்ளது என்றாலும் அதை ஆக்கிரமித்து விட்டு அதனை மறைத்து வேறொரு வண்டிப்பாதை இருப்பதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வண்டிப்பாதை இல்லையென நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளேனா என்றால் பாதை இல்லை என்பதற்கான ஆவணங்கள் எங்களிடம் உள்ளது. வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து அதனை அனுபவிப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லையென்றால் நாங்கள் 40 ஆண்டு காலமாக பயிர் செய்து வருகிறோம். ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாக விசாரணைக்கு ஆஜராகும்போது பயிரிட்டுள்ள பயிர்களை அறுவடை செய்த பிறகு ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்வதாக எழுதிக் கொடுத்து வந்த பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விசாரணைக்கே போகவில்லை. எங்கள் சொத்து வழியாக செல்லும் வண்டிப்பாதை சாத்தூரிலிருந்து ஏழாயிரம்பண்ணை மெயின் பாதையில் இருந்து எங்கள் சொத்தின் வழியாக லட்சுமியாபுரம் செல்லும் வண்டிப்பாதை என்றால் சரியல்ல. புல எண்.48, 52 வழியாகத்தான் வண்டிப்பாதை செல்கிறது என்றால் சரியல்ல. வண்டிப்பாதையை வேண்டுமென்றே ஆக்கிரமிப்பு செய்து வைத்து கொண்டு பொதுமக்களை அனுபவிக்க விடாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. வண்டிப்பாதையை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.